வேண்டுமென்ற விதியைக்கூட நாங்கள் புரிந்துகொள்ளாமல் இருப்போம் என்று கருதுவது விந்தையாக இருக்கிறது. அந்தக் காரியம் நடைபெறும் சமயத்தில் எப்பொழுது வரவேண்டுமோ அப்பொழுது இந்த மன்றத்தின் முன்னுல் வைத்து நிறைவேற்றப்படும்.

தஞ்சாவூர் காந்தி மார்க்கெட்

* 328 வினா—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூரில் அமைந்திருந்த காந்தி மார்க்கெட் என்பது காமராஜ் மார்க்கெட் என்று ஏன், எப்போது மாற்றப்பட்டது?

(இ) அதை மீண்டும் காந்தி மார்க்கெட் என்று வழங்கச் செய்வதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) & (இ) தஞ்சாவூரில் அமைந்திருக்கும் "காந்தி மார்க்கெட்" என்பது "காமராஜ் மார்க்கெட்" என்று மாற்றப்படவில்லை. "கோட்டை காய்கறி மார்க்கெட்" என்பதுதான் "காமராஜ் மார்க்கெட்" என்று மாற்றப்பட்டது. தஞ்சையில் மானம்புசாவடி என்ற வேறு இடத்தில் "காந்தி மார்க்கெட்" என்று ஒரு மார்க்கெட் இருக்கிறது.

புலவர் பொ. பொன்னம்பலம்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, சில மாதங்களுக்கு முன்னுல் தீப்பற்றி எரிந்ததாகச் செய்தி வந்ததே, அது காமராஜ் மார்க்கெட்டில்தானே. அப்பொழுது பத்திரிகைகளில் முன்னுல் இது காந்தி மார்க்கெட் என்று இருந்து, அது காமராஜ் மார்க்கெட் என்று பின்னுலே மாற்றப்பட்டது என்று செய்திகள் வந்திருந்தன. அதுபற்றிய விவரம் தெரியுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: பத்திரிகைகளிலே வந்த செய்திகளை ஆதாரமானவைகளாக எடுத்துக் கொள்ளத் தேவை இல்லை.

Staff Inspection Wing in Finance Department

* 315Q.—THIRU G. GOMATHISANKARA DIKSHDAR: Will the Hon. the Minister for Finance be pleased to state whether there are proposals under the consideration of this Government to have a Staff Inspection Wing in the Finance Department?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அப்படிப்பட்ட உத்தேசம் தற்சமயம் இல்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: தலைவரவர்களே, மத்திய சர்க்காரில் இன்ஸ்பெக்ஷன் ஸ்டாஃப் ஏற்படுத்தியிருப்பதைப் போல, இங்கேயும் ஏற்படுத்தி, ஸ்டாஃப்கள் தேவைக்குத் தகுந்தபடி இருக்கிறார்களா, கூடுதலாக வேண்டுமா, அல்லது குறைக்க

வேண்டுமா என்பதைக் கவனிப்பதற்கு வசதி ஏற்படுமாதலால், இதைக் கவனிக்க அரசாங்கம் முன்வருமா என்று கேட்க விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஏற்கனவே பப்ளிக் டிபார்ட்மெண்டில் 'இன்ஸ்பெக்ஷன் செல்' இருக்கிறது. கண் காணிப்பதற்காக அந்தத் துறையில் இருக்கிறது. எனவே, நிதித் துறையிலும் தனியாக அப்படிப்பட்ட ஒன்று தேவையில்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

THIRU K. VINAYAKAM : Sir, if I can trust my memory I seem to have read in the Press a statement regarding the constitution of a separate Staff Inspection Wing in the Finance Department, made by no less a person than the Hon. Minister for Finance himself. Basing on that statement only this question has been tabled. Is that statement right or this statement right?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இப்பொழுது இல்லை என்று தான் நான் கூறினேன். அப்பொழுது சொல்லியிருந்தாலும் அந்த ஸ்டேட்மெண்டைத் திருத்திக் கொள்வதற்கு இடம் ஏற்பட் டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடி வுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிவிப்பு.

திரு. கோ. பூவராகன் தலைமையில் இயங்கும் கட்சியில் சேர்ந்திருக்கும் உறுப்பினர்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. திரு. கோ. பூவராகன் அவர்கள் தலைமையில் இயங்கும் சட்டப் பேரவை காங்கிரஸ் கட்சியில் கீழ்க்கண்ட இரு உறுப்பினர்களும் சேர்ந்திருப்பதாக எனக்கு அவர் அறிவித்துள்ளதை இப்பேர வைக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

1. திரு. எஸ். சிவசுப்பிரமணியம்.
2. திரு. பி. ஜெயராஜ்.

(3) 1970-71-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் 13—கல்வி.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

" நிதிக் கோரிக்கை எண் 13—கல்வி என்ற தலைப்பின்கீழ் ரூ. 67,73,14,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ".